## ஏட்கன் ஸ்பென்ஸ்
## ஒருங்கிணைந்த நிலைத்திருப்புக் கொள்கை

இந்த வியாபாரத்தின் நிண்டகால நிலைத்திருப்பு, இலாபமீட்டும் தன்மை மற்றும் சிறந்த தரத்தை உறுதி செய்வதில் ஒரு முன்னேற்பாட்டு அணுகுமுறையாக நிறுவன நிலைத்திருப்பை நாம் அறிகிறோம். பல நாடுகளில் இயங்கும் பல்வகைப்படுத்தப்பட்ட ஒரு வியாபாரக் குழுமமாக, நாம் நிலையான அபிவிருத்தி தொடர்பான உலக முன்னெடுப்புக்கள் மற்றும் தர நிர்ணயங்களுடன் எமது உபாயாங்களை ஒன்றிணைப்பதன் மூலம் எடுத்துக்காட்டான நிறுவன அடையாளத்துடனான எமது மரபுரிமையைத் தொடர்வதில் நாம் அர்பணிப்புடன் நிலை கொண்டுள்ளோம்.

## கொள்கைப் பிரகடனம்

ஏட்கன் ஸ்பென்ஸ் ஆனது;

A. எமது நிறுவனத்தின் தொழிற்பாடு நிலையான மற்றும் அபிவிருத்திக்கு வேண்டிய சிறந்த சட்ட நடைமுறைகள் மற்றும் ஏனைய ஒழுங்கமைப்புத் தேவைகளை அடைவதற்கான கட்டமைப்பை நிறுவி பரிபாலன கட்டமைப்பைப் பேணல்.

B. நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதில் வசதிசெய்வதுடன் ஐ.நா உலக சாசனத்தின் 10 மூலதத்துவங்களையும் வலுப்படுத்தி பெண்களை வலுவூட்டும் தத்துவங்கள் மற்றும் நிறுவனத்தின் ஏனைய சுயேற்சையான உறுதியுரைகளையும் ஏற்பதை வலுப்படுத்தல்.

C. நேர்மையான வழியில் வியாபாரத்தை மேற்கொள்வதுடன் எமது பங்காளர்களும் நேர்மையான முறையில் வியாபாரத்தை மேற்கொள்வதற்கு ஊக்குவித்து உதவி செய்தல்.

D. நிறுவன செயற்பாடுகளின் போது சூழல் முகாமைத்துவ ஒழுங்குமுறைகளைப் பயன்படுத்துவதுடன் சூழலில் பாதகமான தாக்கங்களைத் தடுப்பதற்கு சாத்தியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

E. காலநிலை மாற்றம் மற்றும் அனர்த்த நிலைமைகளினால் நிறுவன செயற்பாடுகளிலும் உரித்தாளர்கள் மேலும் ஏற்படக்கூடிய தாக்கங்களை இனங்காண்பதுடன் அவற்றைத் தணிப்பதற்கும் அவற்றுக்கிசைவடைந்து நடப்பதற்கும் ஏற்புடையதான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

F. பங்குதாளர்களுடன் தொடர்பு படுவதுடன் திட்டமிடல் மற்றும் செயற்பாடுகளில் தேவையான கட்டங்களில் அவர்களது உள்ளீடுகளை கவனத்தில் கொள்ளல்.

G. நிலையான உபாயங்களை அமுல்படுத்துவதிலும் முகாமைசெய்வதிலும் வினியோகச் சங்கிலியை ஊக்குவித்தல்.

H. உபாயரீதியான தீர்மானமெடுத்தலில் சமூக மற்றும் சூழலியல் நிறுவன கட்டமைப்பை ஒருகிணைத்தல்.

J. உரிய அபாயங்களைக் கருதிக் கொண்டு அமைப்பின் செயற்பாட்டில் நிலையான செயன் முறைகளைப் பிரயோகித்தல்.

K. செயன் முறைகள், உற்பத்திகள் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு வழங்கும் சேவையில் புத்தாக்கத்தை ஊக்குவித்தல்.

L. இலாபத்தை உறுதிசெய்வதுடன் வாடிக்கையாளர்களுக்கான உற்பத்திகள், சேவைகள் மற்றும் பெறுமானத்தின் தரத்தை தொடர்ச்சியாக மேம்படுத்தல்.

M. நிலையான சமூக அபிவிருத்தித் திட்டங்களில் பங்காளர்களாக இருப்பதுடன் தொழிலாளர் பங்கேற்பை ஊக்குவித்தல்.

N. சாத்தியமாக இருக்குமிடத்து தொழில் வாய்ப்புக்களை வழங்கல் மற்றும் பிரதேச விநியோகஸ்தர்களிடமிருந்து கொள்வனவு செய்வதன் மூலமும் பிரதேச மக்களுக்கு உதவுதல்.

O. தொழிலாளர்களுக்கானதொரு பாதுகாப்பானதும் ஆரோக்கியமானதுமான பணியகச் சூழலை வழங்கும் வகையில் தொழில் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு முகாமைத்துவ முறையைப் பிரயோகித்தல்.

P. ஒரு உறுதியானதும், ஊக்குவிப்புடனானதும், திறன் மிக்கதுமாக மனித வளத்தை கட்டியெழுப்பல்.

Q. சர்வதேச அளவில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள மனித உரிமைகளின் பாதுகாப்புக்கு ஆதரவளித்து அதனை ஊக்குவிப்பதுடன் பணியாளர்கள் அனைவருக்கும் அனைத்து விதமான பாலினப் பாகுபாடுகள் மற்றும் துன்புறுத்தல்கள் அற்ற பாதுகாப்பான வேலை செய்யும் சூழலை ஏற்படுத்திக் கொடுத்தல்.

R. சர்வதேச தர நிர்ணயங்களுடன் முன்னேற்றத் தகவல்களை முகாமைசெய்து பதிவிடல்.

S. உரிய ஒழுங்கு விதிகள், வழிகாட்டல்கள், கொள்கை கட்டமைப்புகள் மற்றும் கைத்தொழில் தரங்கள் மூலம் எமது தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பையும் நிறுவனத்தின் முக்கிய தகவல்களையும் பாதுகாத்தல்.

T. பால், சமயம், இனத்துவம், கலாச்சாரம் அல்லது ஒரு சமூக் குழு மீதான பாகுப்பாடு அல்லது குற்றமிழைத்தல் அல்லது கம்பனியின் தொடர்பாடல்களில் அரசியல் ரீதியாக பக்கச்சார்பாக இருப்பதை வெளிக்காட்டும் உளப்பாங்குகளைத் தவிர்த்துக்கொள்ளல்.

U. எல்லா விலங்குகளையும் மனிதாபிமான முறையில் நடத்தப்படுவதற்கேற்ற உணர்வுள்ள ஜீவிகளாகக் கருதுவதுடன் சகல செயற்பாடுகளின் போதும் விலங்குகளின் நலனை முன்னிலைப்படுத்தல்.

V. வருடாந்த முன்னேற்ற மீளாய்வு மற்றும் திட்டமிடலைக் கடைபிடித்தலில்

திடசங்கற்பம் பூண்டுள்ளது.

### அமுல்படுத்தல்

ஏட்கன் ஸ்பென்ஸ் PLC பணிக்குழு, மேற்பார்வைக் குழு, முகாமைத்துவக் குழு மற்றும் நிலைத்திருப்புக் குழு இதற்கான வழிகாட்டல்களைத் தயாரித்து நெறிப்படுத்துவதற்கு கடமைப்பட்டுள்ளன. உள்ளக சுழற்சியில், ஒவ்வொறு நிலையிலும் அமுலாக்கம் மற்றும் விளக்கக் குறிப்புடனான செயல் திட்டங்களை உள்ளடக்கியதொரு வரைவு இந்தக் கொள்கைப் பிரகடனத்துடன் இணைக்கப்பட்டிருக்கும்.

உபாயரீதியான வியாபாரப் பிரிவுகள் (SBU) அவற்றின் வியாபாரத்திற்க்கான பொருத்தப்பாட்டைக் கவனத்தில் கொண்டு அதனது முன்னெடுப்புக்களின் ஊடாக இந்தக் கொள்கையை அடைவதில் படிப்படியாகப் பணியாற்றும். ஒவ்வொரு SBUக்களும் தேவையான கட்டமைப்புகள், தரமான செயற்பாட்டு ஒழுங்குவிதிகள் மற்றும் இயற்கையுடனும் நிறுவனத்தின் செயற்பாட்டுப் பரிமானத்துடனும் தொடர்புபட்ட வகையில் சமூக, சூழலியல் மற்றும் பொருளாதார நிருவாக முன்னுரிமைகள் ஊடாக இந்த செயற்றிட்டங்களை அமுல்படுத்துவதில் முன்னிலை வகிப்பது எதிர்பார்க்கப்படுகிறது.

தேவைப்படுமிடத்து, இந்தக் கொள்கை அமுலாக்கத்தை வசதியளிக்கும் வகையில் விழிப்புணர்வு மற்றும் பயிற்சித்திட்டங்கள் முன்னெடுக்கப்படும்.

| ***Document Control: Aitken Spence Integrated Sustainability Policy, V4, Tamil*** | |
|---|---|
| Date of review: | 03.04.2023<br>(Tamil translation updated) |
| Date of most recent previous review: | 26.10.2018 |
| Reviewed by:<br>**Dr. Rohan Fernando**<br>Director – Aitken Spence PLC,<br>as the Head of Sustainability for the Aitken Spence Group<br>Dr. Rohan Fernando<br>Digitally signed by Dr. Rohan Fernando<br>Date: 2023.06.08 12:49:03 +05'30' | |